நவமணி.

உள்நாடு ரூ 1

வெளிநாடு ரூ $1\frac{1}{2}$



11 NOV 1930

ஆசிரியன் சி. ரா. ம. இராமநாதன்

NAVAMANI.

(*A High Class Tamil Monthly*)

PALLATUR. RAMNAD DT.

Vol. I. பிரமோதூத, புரட்டாசி௴ No 9.

கடவுள் வணக்கம்.

11 NOV 1930

தனதன தந்தாத் தந்தத்
தனதன தந்தாத் தந்தத்
தனதன தந்தாத் தந்தத் தனதான.

அவனிப றுங்தோட்ட டம்பொற்
குழையட ரம்பாற் புண்பட்
டரிவையர் தம்பாற் கொங்கைக் கிடையேசென்

றணைதரு பண்டாட் டங்கற்
றுருகிய கொண்டாட் டம்பொற்
றழிதரு திண்டாட் டஞ்சற் றொழியாதே

பவமற நெஞ்சாற் சிந்தத்
திலகுக டம்பார்த் தண்டைப்
பதயுக ளம்போற் றுங்கொற் றமுநாளும்

பதறிய அங்காப் பும்பத்
தியுமறி வும்போற்ச் சங்கைப்
படுதுயர் கண்பார்த் தன்புற் றருளாயோ

தவநெறி குன்றுப் பண்பிற்
றுறவின ருந்தோற் றஞ்சத்
தனிமல ரஞ்சார்ப் புங்கத் தமராடித்

தமிழினி தென்காற் கன்றிற்
றிரிதரு கஞ்சாக் கன்றைத்
தழலெழ வென்றூர்க் கன்றற் புதமாகச்

சிவவடி வங்காட் டுஞ்சப்
குருபர தென்பாற் சங்கத்
திரள்மணி சிந்தாச் சிந்துக் கரைமோதும்

தினகர திண்டேர்ச் சண்டப்
பரியிட றுங்கோட் டிஞ்சித்
திருவளர் செந்தூர்க் கந்தப் பெருமாளே.

தந்ததன தான தனதத் தான
தந்ததன தான தனதத் தான
தந்ததன தான தனதத் தான தனதான

சந்தனச வாது நிறைகற் பூர
குங்குமப டீர விரைகத் தூரி
தண்புழுக வாவு களபச் சீத வெகுவாகச்

சண்பக கலார வகுளத் தாம
வம்புதுகி லார வயிரக் கோவை
தங்கியக டோ தரவித் தார பரிதான

மந்தரம தான தனமிக் காசை
கொண்டுபொருள் தேடு மதிகிட்டோ
வஞ்சகவி சார இதயப் பூவை அணையார்கள்

வந்தியிடு மாய விரகப் பார்வை
அம்பிலுளம் வாடு மறிவற் றேனை
வந்தடிமை யாள இனிஎப் போது நினைவாயே

இந்த்ரபுரி காவல் முதன்மைக் கார
சம்ப்ரமம யூர துரகக் கார
என்றுமக லாத இளமைக் கார குறமாதின்

இன்பஅநு போக சரசக் கார
வந்தஅசு ரேசர் கலகக் கார
எங்களுமை சேயெ னருமைக் கார மிகுபாவின்

செந்தமிழ்சொல் நாலு கவிதைக் கார
குன்றெறியும் வேலின் வலிமைக் கார
செஞ்சொலடி யார்கள் எளிமைக் கார
[எழில்மேவும்

திங்கள்முடி நாதர் சமயக் கார
மந்த்ரஉப தேச மகிமைக் கார
செந்தில்நகர்வாழும் அருமைத்தேவர் பெருமாளே

ஸ்தல மஞ்சரி.

ஸ்ரீமதி. பண்டிதை அசலாம்பிகை அம்மாளவர்கள்.

முத்துவாளியம்மை.

திருமுத்து மாதுமையாள் செய்யதிருக் கோலம்
உருவத்துட் காண வொளிரும்—அருமுத்தி
யீந்தருளும் பாதியுமை யெம்மா னபிடேகம்
வாய்ந்தனமெம் மாதவத்தி னால். 61.

திருப்பெருந்துறை.

மூவுலகுஞ் சிறுதுறையுள் மூழ்காமற் பெருந்துறையுள்
தாவரிய நால்வேதத் தருவுருவாய் விரிகுருந்த
மேவியெழுந் தருளியசீர் மெய்ஞ்ஞான தேசிகநின்
ஓவிலரு ளடியேற்கு முற்றநிற மென்னேயோ. 62.

மாணிக்கவாசகர்.

ஈசனே யாசானு யெய்திடுமா செய்தமணி
வாசகனே நீபெற்ற வாழ்வையெலாம்—நேசமொடும்
காணுத கண்வேயின் கண்மதகின் கண்ணெனவே
கோணுமற் சொல்வேன் குறித்து. 63.

குன்றக்குடி.

அன்றக் குடிலைக் கரியமறை யோதியசீர்க்
குன்றக் குடிவாழ் குமரேசா—இன்றென்
பிழைபொறுத்துப் போதம் பெரிதோங்கச் செய்வாய்
மழைபொறுத்த மாகருணையால். 64.

குன்றக் குடியிற் குகவென் னெஞ்சக்
குன்றக் குடியார் குருவே யுன்றன்.
வென்றிக் கழலிற் றொழுவோர் வினைகள்
ஒன்றிக் குடிபோ யினவோர் கணமே. 65

திருவேடகம்.

நாடகத்தே யோடி நலிந்துழலா தானந்த
வீடகத்தே யேக விருப்புடையீர்—ஏடகத்தே
வாழிலிங்க நாயகனை வந்தடைந்து சிந்தையுறத்
தாழிலங்கை நெல்லியது தான். 66

தென்றிசையிற் காலன் றிருநகருக் கேகாமல்
சென்றிசைமி னெம்மான் சிவபுரத்தை—நின்றிசையோ
டென்றழைக்கு மாறெனவே யேடெதிரிற் கொண்டதிருப்
பொன்றழைக்கும் வைகைப் புனல். 67.

திருவஹீந்திரபுரம்.

அம்பொற் கெடில நதிசூ ழகீந்திரத்தில்
செம்பொற் கமலத் திருவோடும்—நம்பும்
அடியார்க் கருள்தேவ நாதன்பொற் பாதம்
முடிமேற் புனைந்தேன் முனம். 68.

பண்டறத்தி னீற்றைப் பாவியணியாமற்
புண்டரத்தி னாமம் பொறித்தமைதான்—கண்டறிந்தேன்.
காமாந் தகன்பாற் கரியதிரு மாலடியார்
ஏமாந் ததற்கிங் கெனை. 69

பொங்கமலத் தேனே பொலிவே புகழ்பூத்த
செங்கமலத் தாயே திருவருள்செய்—திங்களது
பூவா டையைவிரைவிற் போதரவே செய்தெனது
நோவாடை தீர்ப்பாய் கொடி. 70.

(தொடரும்.)

உ

எல்லாம் தெய்வச்செயல்.

'நவ மணி;'

பெற்ற தாயும் பிறந்தபொன் னாடும்
நற்றவ வானிலும் நனிசிறந் தனவே. [பாரதியார்.]

மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு. [திருவள்ளுவர்.]

மாலை 1 } பள்ளத்தூர். பிரமோதூத, புரட்டாசி. { மணி 9.

இதுவா மணம்?

இவ்வுலகில் மக்கள் மாண்புடன் வாழவும் மரியாதையுடன் இல்லறம் நடாத்தவும் வேண்டிய பலமுறைகளைக் கற்றுக்கொண்டு அதன்படி ஒழுகுதலாலேயே மாக்களினும் வேருக்கப்பட்டு மக்கள் விசேஷமாக மதிக்கப்படுகின்றனர். மாக்களின் மணதிற்கும் மக்களின் மணதிற்கும் வேறுபாடுகள் பலவுள. மாக்கள் தாங்கள் நினைத்தபொழுது நினைத்தவிடத்தில் கூடிக்குலாவித்திரிய இணங்கும் ஒன்றைத் தன் தம்பதியாகப் பெறுகிறது. ஆனால் யாவும் அம்மாதிரியே பெறுகிறது யென்றும் சொல்லமுடியாது. அதிலும் தனித்தோர் முறையில் ஒரே ஜோடி ஆண் பெண்கள் கடைசிவரை வாழ்வதையும் காணலாம். மக்களோ அவ்வாறில்லை. மக்களாய்ப் பிறந்தவர் யாவரும் சமூகத்துறை

யில் குடும்பம் நடாத்தவேண்டிய வழிகள் யாவையும் நன்கு யாராய்ந்து பின்னர் ஆராய்ச்சியாளர் பலரின் முன்னிலையில் அவர்களின் சம்மதிகொண்டு தகுதிக்கேற்ற ஒரு கணவனுக்கு ஒரு மணமகளை அவர்களிருவரின் விருப்பத்தின்பேரில் ஒன்றுபடச் செய்வதே மக்களின் மணமாகும். மணம்பெற்ற தம்பதிகளிருவரும் தங்களின் அறிவை விசாலப்படுத்தி உயர்ந்த நோக்கில் உத்தம குணத்துடன் உலகியல் நடாத்தி தாங்களும் அறிவாளிகளென்ற பெயரெடுத்து தங்களினும் சிறந்த குழந்தைகளை இவ்வுலகிற்கு அளிப்பதே அவர்களின் நடைமுறைப் பழக்கமாகவிருக்க வேண்டும். அவர்கள் தங்களின் விடாமுயற்சியால் உலகியல் ஒவ்வொன்றிலும் முன்னணிவகித்து இதர தம்பதிகளைக் காட்டிலும் பொருளீட்டுவதிலும் அறிவுநூல் அறிவதிலும் கைத்தொழில்கள் பல கற்பதிலும் சிறந்து பிறருக்கும் அதைப் பயன்படச் செய்வதே தருமமாகும். இதைச்செய்யும் தம்பதிகளே உலகத்தில் உயர் குடும்பமென்றும், அல்லாதார் தாழ்ந்தோர்களென்றும் ஆன்றோர்களால் கொள்ளப்படுகின்றனர். இந்நிலை தவறி மணமே தம்பதிகளின் சம்மதியன்றி பெற்றோர்களின் இஷ்டப்படி சிற்சில இடங்களில் செய்யப்படுகின்றதென்றால் அது விலக்கப்பட்டு தம்பதிகள் சம்மதிபெற்ற மணமே சாலச்சிறந்ததென அவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். அம்முறையை மாற்ற முயற்சிக்கவேண்டும். ஆனால் இப்பழக்கம் எல்லா சமூகத்தவரிடையுமில்லை. குறிப்பிட்ட சில சமூகத்தவரிடையேதான் உள்ளன. அதுவும் நாளடைவில் சீர்திருத்தத்திற்கு வந்துவிடக்கூடியதே. இப்பழக்கத்தை மாற்றி ஆங்கிலேயர்போல் காதல் மணம் வேண்டுமெனச் சிலர் விரும்புகின்றனர். காதல் மணமற்ற இக்காலிலேயே இத்தனை கேடுகள் விளைகின்றனவென்றால் காதல் மணப் பழக்கம் வந்தபின் அக்கேடுகள் முற்றிவிடும். எனவே காதல் மணமும் கொள்ளத்தக்கன அல்ல. காதல்மணம் ஓர் காதலன் ஓர் காதலியை இச்சிப்பானேயானால் அவர்கள் இருவர் மனமும் ஒன்றும்வரை அவர்கள் உறவாட வேண்டும். இருவர் மனமும் ஒன்றுசேர்ந்தால் மணம் நிகழும் இல்லையேல் அவர்கள் உறவு நீங்கும். மணம் நிகழுமுன் அவ்வாறு ஒன்றிவாழ ஓர் காதலன் காதலியை தனித்துவிடுவது மிகத் தீய பழக்கமே தவிர நன்றென நல்லோர் யாவரும் ஒப்பார்.

அது ஏனைய சில நாட்டில் பெரிதும் நம் நாட்டில் சில இடங்களி லும் உள்ளதானபோதிலும் எங்கும் அதை நிலைநாட்ட அறிஞர் யாவரும் இணங்கார் என்பது திண்ணம். இப்பொழுது நம் நாட்டு மணமுறைகளில் உள்ள சில கெட்டபழக்கங்களையும் அதிகச் சிலவையும் மாற்றிவிட்டால் அம்முறையே நமக்கு நன்முறையாக விளங்கும்.

உலகியல் ஒவ்வொன்றிலும் நாம் சீர்திருத்தமடைந்து நம்முள் உள்ள கண்மூடிப் பழக்கவழக்கங்களையும் குருட்டு நம்பிக்கைகளை யும் விட்டுவிட வேண்டுமென்ற பிரசாரக் கழகமாகிய சுயமரியா தைக் கழகத்தார் இப்பொழுது நம் நாட்டில் புதுமணம் நிகழ்த்தி வருகின்றனர். இது சிலவிடங்களில் கையாளப்பட்டு வருகின்றது. அதில் சில நன்னோக்கங்களிருந்தபோதிலும் தீய வழிகளே பெரிதும் பின்பற்றப்படுகின்றன. அவர்கள் கொள்ளும் கலப்பு மணம் நன்றே. அது மிகப் பழைய காலத்திலுள்ள அறிவாளிக ளும் ஒப்புக்கொண்டதே. அடுத்து விதவாவிவாகமும் தற்கால உலகில் கொள்ளத்தக்கதே. இதுவும் பண்டையப் பெரியோர் களால் கொள்ளப்பட்டபோதிலும் மத்தியில் கைவிடப்பட்டிருந் தது. ஆனால் முந்திய நமது முறைகளைத் தழுவி ஆன்றோர் பல ரின் முந்நிலையில் மணஞ்செய்விக்கப்பட்ட மனைவிகளை தனி மனை யிருத்தி அவளைத் துக்கிக்க விட்டுவிட்டுப் பின்னர் மீண்டும் காம உணர்ச்சி கொண்டு செய்யப்படும் மணமா விதவா மணம்? அதுவா கலப்பு மணம்? இது இப்பொழுது நம் நாட்டில் சில இடங்களில் செய்யப்படுகிறது இன்னுஞ் செய்துகொள்ள விருப்பப்படும் பல மணம்புரிந்த இளைஞர்கள் இதை ஆதரிக்கின்றனர். இதுவா மணம்? இதுவா சுயமரியாதை? சுயமரியாதை உணர்ச்சி ததும்பும் ஒவ்வோர் இளைஞரும் சிறிது சிந்தித்துப் பாருங்கள். நம்மை ஓர் ஜாதியார் அடிமைகொண்டனர். நமது மூடனத்தனத்தால் அடி மைப் பட்டோம். நமது நிலையறிந்த பின்னரும் அவ்வாறே அடி மையாக வாழவேண்டாம். தீய பழக்கங்களைவிட்டுவிடுங்கள். தீய பழக்கத்தில் நம்மை ஈடுபடச் செய்தவர்களின் வார்த்தையைக் கேட்டு மோசம்போகாதீர்கள் எனச்சொல்லும் போலிவீரர்கள் யோஜிப்பார்களானால் இம்மணத்திற்கு சுயமரியாதைத் திருமண மெனப் பெயர் சூட்டுவார்களா?

நாம் ஆண்கள் என்ற கர்வ எண்ணங்கொண்டு நம்மை நம்பி வந்த பெண்ணை வஞ்சித்து அடிமைப்படுத்தி ஓர் மூலையில் வைத்து விட்டுத் தாரமிருக்கத் தாரங்கொள்ளும் தன்மையாளரை சுயமரியாதை வீரர்களென்றால் அப்பெண் சமூகம் என்ன எண்ணும்? ஓ, ஹோ! பிராம்மணன், சைவன் என்ற சமூகத்தினன் இவர்களை அடிமையாக்கியதை விலக்கப்பாடுபடும் இவர்கள் பெண் சமூகமாகிய நம் சமூகத்தையல்லவா அடிமையாக்குகிறார்கள் என்ற உணர்ச்சி ஏன் அவர்கள் மத்தியில் உண்டாகாது? இயற்கையிலேயே ஒரு கணவன் ஒரு மனைவியையே கொள்ளவேண்டுமென்ற ஒழுங்குச் சட்டமிருக்க அதை மீறி ஒருமுறை மணந்தவளை ஒரு மூலையில் வைத்து மறுமுறை மணக்க எண்ணுதல் ஞாயமோ? அவ்வாறு சுயமரியாதை உண்மை எண்ணமுள்ளவர்கள் தங்கள் மனைவியை தன் இஷ்டம்போல் ஒருவரை மணந்துகொள்ளும் சுதந்திரத்திற்குள்ளாக்கி அதன்படி செய்கையில் காண்பித்துவிட்டல்லவோ தாங்கள் தங்கள் இஷ்டம்போல் வேறு மனைவியைத் தேடவேண்டும். அஃதில்லையேல் அது உண்மை சுயமரியாதை உணர்ச்சியாகுமா? ஒருபுறம் தன் மனைவியையே அடிமைப்படுத்தி தன்னிஷ்டம் போல் அவளின் சம்மதியும்பெறாமல் ஏன் அவளுக்கும் அறிவிக்காமல் மணம் செய்துகொள்ளு இம்மணம் மணமாகுமா? இது காமவெறிகொண்டு வாழும் சாதாரண மனிதர்களின் இயல்பையே காட்டுமேயல்லாமல் சுயமரியாதை வீரர்களின் தன்மதிப்பைக் காட்டாது. நாமும் சுயமரியாதையை ஆதரிப்பவனே. சுயமரியாதையுடன் வாழவிரும்புவோனே. ஆனால் சுயமரியாதையின் பெயரால் நடைபெறும் இம்மாதிரியான அவமரியாதைகளை பார்த்து சகிக்கமுடியாதவனே. இப்பரந்த உலகில் மக்கள் இரண்டல்ல தங்கள் திரேக பலமும் உடை, உணவளிக்கும் திறமையுமுளதேல் இரண்டாயிரம் மணங்கள்கூடக் செய்துகொண்டதாகக் கதை சொல்லுகிறார்கள். அவைகள் மணமாகாது. அம்முறையில் எத்தனையோ நடைபெறுகின்றன. இம்மணம் அம்முறையல்லாமல் சீர்திருத்த இயக்கத்தின் பெயரால் நடைபெறுவதால் இதை நாம் கண்டிக்காமலிருக்கமுடியவில்லை. இனியேனும் அன்பர்கள் இத்தியாதி மணங்களை திறைமரவில் நடத்தவேண்டுமே தவிர அம்பலத்தில் நடத்தாதிருப்பார்களா? உண்மை சுயமரியாதை உணர்ச்சி உள்ள ஒவ்வோர்வரும் இம்மணத்தை நன்மணமெனமதியார். இது சுயமரியாதை மணமுமாகாது.

மணியொளி.

ரப்பர் வீழ்ச்சி.

மலேயாவில் ரப்பர் விலை நாளுக்குநாள் விழுந்துகொண்டிருக்கிறபடியால் முன்னர் கூலிகள் இங்கிருந்து எவ்வாறு ஏற்றப்பட்டனரோ அவ்வாறே இப்பொழுது கொண்டுவந்துவிடப்படுகின்றனர். நமது இந்திய ஏழை ஜனங்கள் கங்காணிகளின் பேச்சைக் கேட்டுத் தான் முன்னர் செய்துகொண்டிருந்த தொழிலையும் விட்டுத் தன் பந்துக்களையும் விட்டுப்போய் சகிக்கொணுத் துன்பங்களுக்கு ஆளாகிக் கூலிவேலை செய்தும் இப்பொழுது அதற்குந் திண்டாட்ட மேற்பட்டுத் தாயகம் திருப்பியனுப்பப்படுகின்றனர். இது அரசனை நம்பி புருஷனைக் கைவிட்டவளின் கதைக்கேற்ற முறையில் அதிகவருமானம் கிடைக்கிறதென ஏற்கனவே செய்துகொண்டிருந்த தொழிலையும்விட்டு இப்பொழுது இரண்டுங் கெட்டானுய் திண்டாடவேண்டி வந்துவிட்டது. இனியேனும் ஏழை மக்கள் கங்காணிகளை முற்றும் நம்பார்களென எச்சிரிக்கை செய்கிறோம்.

உடற்பயிற்சி மகாநாடு.

கீழச்சிவல்பட்டியை அடுத்த அழகாபுரியின் கண்ணேகூடிய உடற்பயிற்சியாளர் மகாநாடு செட்டிநாட்டரசர், ராஜா ஸர். அண்ணாமலைச் செட்டியாரவர்களால் முன்குறிப்பிட்டபடி திறக்கப்பட்டு தஞ்சை டாக்டர் தாஜுடீன் அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றதென்றும் அதன்கண் திரேகப் பயிற்சியாளர் பலர் தங்கள் திறமையான பயிற்சிகளைச் செய்து காண்பித்துப் பல்வேறு மெடல்கள் பெற்றனர் என்றும் அதில் சிரேஷ்டமான செட்டி நாட்டரசரின் வெள்ளிக்கப் சன்மானத்தை சாண்டோ லெ. சோமசுந்தரனுரே பெற்ருரென்றும் கேள்விப்பட்டு சந்தோஷிக்கிறோம். இத்தியாதி மகாநாடுகள் திரேகப்பயிற்சியாளரை நமது நாட்டில் மிகைப்படுத்தத்தக்க உதவியாகுமென எடுத்துக்காட்டுகிறோம்.

மலேயாவில் கொள்ளைக்கூட்டம்.

மலேயாவில் ஆங்காங்கு சில கொள்ளைக்கூட்டங்கள் வசித்து வருகின்றன. அதில் மிகுதியும் சீனர்களும் ஏனைய வகுப்புக்களில் சிலரும் சம்மந்தம் வைத்துள்ளனரெனத் தெரிகிறது. இவர்கள் அடிக்கடி சில தனவந்தர்களைக் கொண்டுபோய் சிறைப்படுத்திப் பெரும்பொருள் திரட்டிக்கொண்டு மீட்பதும் இக்கூட்டத்திற்குத் துன்பம் நிகழுமேல் அவர்களைக் கொலை செய்துவிடுவதும் பகலினும் இரவினுமாக அபூர்வ சமயங்களில் லேவாதேவிக் கடைகளில் சிலர் நுழைந்து துப்பாக்கிகளைக் காண்பித்துப் பயமுறுத்திக் கொள்ளையடிப்பதும் ஈயலெலாம்பம், ரப்பர் தோட்டம் முதலியவைகளுக்கு முதலாளிகள் பணப் பெட்டியுடன் செல்லும்பொழுது வழிமறித்துக் கொள்ளையடிப்பதும் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வருகிறது. ஏனையவிடங்களைப் போன்று நிர்வாகத்திறமையும் பாதுகாப்புப் படைகளுமிருந்தும் அடிக்கடி இவ்வாறு நிகழ்வதும் இதனால் பணக்காரர்கள் பெரும் ஆபத்திற்குள்ளாக நேர்வதும் துக்ககரமான விஷயம். எனவே, மலேய கவர்ன்மெண்டார் மிகவும் முயற்சித்து விசேஷத் துப்பறிஞர்களை வைத்தேனும் இக்கொள்ளைக் கூட்டங்களைப் பிடித்துத் தக்கது செய்யவேண்டுகிறோம்.

வீண் சண்டை.

இச்செட்டியார் நாட்டில் படித்துச் சீர்திருத்த வேலை செய்யும் சில அறிஞர்களிடையே அடிக்கடி வாதப் பிரதிவாதங்கள் நிகழ்வது சகஜமேயானபோதிலும் இப்போதையமாதிரியான சண்டைகள் தோன்றி வேலைசெய்வதுபோன்ற ஆபாசமுறையில் இதுவரை எக்கட்சிகளும் சண்டையிட்டுக்கொண்டதில்லை. இச்சண்டையால் வெளிவந்த சாம்பல் நாய்கள், லக்ஷ ரூபாய் கணக்கு, சோமசுந்தர லீலை போன்ற பிரசுரங்கள் அறிஞர்கள் மத்தியிலிருந்து எழுந்ததாக எவரும் கொள்வதற்கில்லை. இனியேனும் இத்தியாதி சண்டைகளை நிறுத்திவிட வேண்டுகிறோம்.

தீபாவலி.

அக்காலத்தவர் பண்டிகைகளை ஓர் நற்காரியங்கருதியே சிருஷ்டித்தனர். அத்தினங்களில் அறிஞர்கள் யாவரும் பக்தி

யோடு ஒன்றுகூடி முன்நாளிலுள்ள நல்லோர் செய்த நல்லனபற்றி ஆராய்ச்சியுரை வழங்கி பாமர மக்களை முன்னுக்குக் கொண்டுவருவதற்குப் பண்டிகைகள் பலன்படுத்தப்பட வேண்டுமே யொழிய கையில் பணம் எஞ்சியில்லையேனும் கடன் வாங்கி உண்டு உடுத்தி சூது முதலிய ஆடல் பாடல்களில் களிப்பதற்கன்று. ஆனால் இந்நாள் பண்டிகைகள் பின்கண்ட முறையில்தான் பயன்படுத்தப்படுன்கிறன. தற்பொழுது தேசமுள்ள நிலையில் இத்தியாதி பண்டிகைகளில் வீண் செலவுசெய்து இன்னும் கடன்காரர்களாகாமல் முன்னேற்ற முறையைக்காணும் வழியில் வரும் தீபாவலியை யாவரும் பயன்படச் செய்வார்களென எதிர்பார்க்கிறோம்.

சுதந்தரமார்க்கம்.

"மைகேல் காலின்ஸ்" என்பவர் ஐர்லாண்டு தேசத்து மகா புருஷர்களில் ஒருவர்; தேசாபிமானிகளில் தலைசிறந்தவர். அம்மட்டோ! தைரியம், சாகஸம், உயர்வு, சம்பத்து ஆகிய இவைகளில் முதன்மையுடையவர். ஐர்லாண்டின் சுதந்தரத்திற்கு அடிகோலி அதனை ஸ்தாபித்த பிரதான புருஷர்களில் அவரும் ஒருவரென்றால் வேறு கூறவானேன்? இவர் துஷ்டர்களின் எதேச்சாதிகாரத்தினால் ஆகஸ்டு மாதம் 22-ந்தேதி டப்ளின் நகரின் நடுத்தெருவில் கொல்லப்பட்டார். இவர் அநியாயமாய் மரணமடைவதற்கு முன்னர், தமது கருத்துக்கள் சிலவற்றை தமது கைக்குறிப்பு ஒன்றில் எழுதிவைத்திருந்தார். அக்கருத்துக்கள் "சுதந்தரமார்க்கம்" என்ற தலைப்பில் புத்தகரூபமாகப் பிரசுரிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சுதந்தரதாகத்தை எழுப்பவல்ல அத்தகைய சொற்களை ஐர்லாண்டு தேசத்தில் தோன்றிய ஒவ்வொர் ஆண்மகனும் தான் படித்து மகிழ்வதன்றிப் பிறருக்கும் எடுத்து மொழியப் பின்வாங்காதிருந்தான். அக்குறிப்புக்களாவன:—

"ஜர்லாண்டு தனது தேச சரித்திரப் புதிய சகாப்தத்தை ஆரம்பித்திருக்கிறது. நமது தேசம் விவசாய அபிவிருத்தியில் முன்னேற்றமுடையது. நம்மவர்கள் புத்திமான்கள். அதனுடன் அமைதி, ஒற்றுமை, பலம் ஆகியவற்றில் சிறந்தவர்கள். வியாபாரம், கல்வி முதலியவற்றைப் பெருக்குவதில் பெருவிருப்பமும் உலையா முயற்சியும் வாய்ந்தவர்கள் இவைகளை இல்லையென்று மறுக்க யாரேனும் முன்வரக்கூடுமா?

தற்கால நாகரிகம் தாறுமாறானது. உண்மையான நாகரிகத்தை மக்களுக்கு அளிப்பதில் விருப்பமுடைய நாடுகளனைத்திலும் ஐர்லாண்டு ஒன்றே முதன்மைவாய்ந்தது. இக்காலமே நமக்குத் தங்கம்போன்ற காலம். நமது கைகளில் எவ்வளவோ பலங்களிருக்கின்றன............................"

"நாம் அனைவரும் அஞ்சாமல் முன்னேறிச்செல்லவேண்டும். நமது விரோதிகளுக்குமுன் ஐர்லாண்டு தனது பிரகாசத்தை எங்கும் பரப்பவேண்டும். நவீன சம்பிரதாயத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள நமது பூர்வீக உயரிய ஞானத்தைப் புனருத்தாரணம் செய்யவேண்டும். பிறருடைய ஆதிக்கத்தால் சுதந்தரமற்ற நாடுகள் பட்டபாடுகள், அடைந்ததோல்விகள், செய்த பிழைகள் நம்மையடையாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.................."

சி. கு. நா.

எது தேவை?

எனது நெடுங்கனவு. ஓர் துப்பறியும் நாவல்.	0—6—0
இரட்டைப்புலவர் சரிதம். அறிய குறிப்புடன்.	0—6—0
ஒட்டக்கூத்தர் ஈட்டி எழுபது பாடிய வரலாறு. பெரிய ஆராய்ச்சி.	0—2—0
தமிழன் இனிய நூல்.	0—6—0

கிடைக்குமிடம்:—

நவமணி பத்திரிகாலயம்,

பள்ளத்தூர். (PO.)

கனகவல்லி

அல்லது

கள்வர் கவர்ந்த கன்னிகை.

கோவை. திரு. சி. கு. நாராயணஸ்வாமி முதலியார் அவர்கள்.

(சென்ற மாதத் தொடர்ச்சி)

இருவரும் சேர்ந்து ஒரு நாள் நெடுநேரம் ஆலோசித்து மாமனார் வெளியில் சென்று சமைத்துவருவதை நிறுத்திவிடுவதென்றும், நாலுபாதைகள் கூடும் நல்லவிடத்தில் ஒரு சாப்பாட்டு விடுதி திறப்பதென்றும், அதற்கு "நளபாக விலாசம்" என்று பெயரிடுவதென்றும் தீர்மானித்து, அத்தீர்மானத்தின்படி நன்னளொன்றில் சில செல்வர்களின் உதவிகொண்டு புதிதாகச் சாப்பாட்டு விடுதியொன்று திறந்துவைத்தனர். திறந்துவைத்த காலவிசேடமும் நற்காலபயனும் ஒருங்கே சேர்ந்து வருவாய் அதிகரித்ததால் வளர்பிறைபோல் விடுதிபெருகி தன் பெயர் எங்கும் பரவி வியாபித்தது. இதனால் சாப்பாட்டுவிடுதி, குறைவில்லாத அன்னசத்திரம்போல் விளங்கி ஜனங்கள் குவிந்தவண்ணமாகவேயிருந்தனர்.

மேலே முதன்மூன்று அத்தியாயங்களில் விவரிக்கப்பட்ட விருத்தாந்தங்கள் நிகழ்ந்த பத்தாண்டுகட்குப் பின்னர் ஒருநாள், பொன்னம்மாளது நளபாக விலாச சாப்பாட்டு விடுதியில், பெருஞ் செல்வனும் உண்மைத் தேசாபிமானியும், கல்வி, கேள்வி, வீரம், பரிந்துருகுந் தயாளம், வாக்குறுதி முதலியவைகளில் மிக்கானும் இளமைசிறந்த வல்லானுமான க்ஷத்திரியமரபு "ஆனந்தராஜா" என்னும் இளவல் தனது உண்மை ஊழியனும் உயிர்துணைபோன்ற உபகாரியுமாகிய 'வேலன்' என்பவனுடன் வந்து தனி விடுதியொன்றில் ஜாகை செய்துகொண்டிருந்தனன். மேற்குறித்த இருவர்களும், இனி நிகழவிருக்கும் சம்பவங்கட்குக் காரணபூதர்களும், பிரதான அங்கத்தவர்களும் ஆவர். ஆதலால் இவ்விருவர்களை

யும் பற்றி வாசகர்கள் முற்கூட்டியுணருமாறு சில கூறவேண்டுவது அவசியமாகின்றது. அவை:—வேலன் என்பவன், சிறுவயது முதற்கொண்டே ஆனந்தராஜா வீட்டுக்கு உண்மைத்தொண்டுபுரிந்து வரும் நம்பிக்கையுள்ள வேலையாள். மிக்க ஊக்கமும், தளராத நடையும் உடையவன். உரம்பொருந்திய தேகக்கட்டும் முதன்மையான எஜமான விசுவாசமும் உடையவன். ஆனந்தராஜா, அழகிரிராஜாவின் அருமைப் புதல்வன். அழகிரிராஜா கோலகொண்டா நவாப்பின் யுத்த தளவாட காரியாலயத்தில் பிரதான உத்தியோக புருஷன். அவ்வுத்தியோகத்தினல் பெரும்பொருள் திரட்டி, நல்ல நஞ்சை நிலங்களும், தென்னந்தோப்புகளும், வாழைத்தோட்டங்களும், கரும்புக்கொல்லைகளும் எதேஷ்டமாய் வாங்கி லட்சாதிபதியாய் விளங்கினன். அழகிரிராஜாவின் உயரிய மாளிகைக்கு 'கோபிகாரமண நிலயம்' என்பது பெயர். மனோகரமான மாளிகை அழகின் அவதாரம் எனக்கூறினும் மிகையாகாது. இவரது மைத்துனர் பெயர் 'கனகராஜா' இவர் கொண்டபல்லி சிரஸ்தாராயிருந்து உபகாரச்சம்பளம் பெற்று சுகமாய் ஜீவித்துவந்தவர். இவர்க்குத் திடீரென உடம்பு குணமின்றிக் கேவல நிலையிலிருப்பதாகக் கோலகொண்டாவுக்குச் செய்திவர, அழகிரிராஜாவுக்கு விலக்கமுடியாத வேலைகள் பலவிருந்த காரணத்தால், தனது குமாரன் ஆனந்த ராஜாவை கொண்டபல்லி சென்று வியாதியின் குணத்தைத் தெரிந்துவருப்படி போதிய பொருள்களை வழிச்செலவுக்குக் கொடுத்து வேலனையும் துணைக்காகச் சேர்த்தனுப்பினன். அக்காரியமாகவே அவர்கள் வந்து அங்கு தங்கியவர்கள் என்பனவே.

ஆனந்தராஜா என்ற க்ஷத்திரியத் தோன்றலுக்குச் சுமார் இருபத்து மூன்று வயதிருக்கும். இவனது வட்டவடிவமான அழகிய முகம், அன்றலர்ந்த இளரோஜா நிறமுள்ள தாமரை மலர் போலிருந்தது. அம்முகத்திற்கேற்ற பருத்த விழிகள் பொருத்தமாய் அமைந்து கருணை ததும்பி வழிந்துகொண்டிருந்தன. அகன்றுயர்ந்த இவனது நெற்றிபரந்த நோக்கமும் கூறிய அறிவும் உடையானென்பதை விளக்கியது. சிறு குன்றுபோல் பருத்துயர்ந்த இவனது புயங்கள், இரண்டும் இவன் பகைவர்களைப் புறங்காணவல்லானென்பதை விளக்கிக்கொண்டிருந்தன. முழங்கால் வரையும் தொங்குகின்ற இவனது நீண்ட கரங்கள், க்ஷத்திரியத் தோன்

றல்களுக்கு அமைந்திருக்கவேண்டிய சாமுத்திரிகாலட்சணத்தின் அடையாளம் என்பதை அறிவித்தன. தேகத்தின் வண்ணநலம் காண்போர்க்குக் கண்விருந்தாயிருந்தது. சம்பூர்ண ஆரோக்கியத்தால் வளர்க்கப்பெற்ற மனிதனுடைய தேகம், கொழுத்துப் புஷ்டி பெற்றிருக்கவேண்டிய முறையில் அவனது தேகம் வளப்புற அமைந்திருந்தது. தேக அமைப்புக்கேற்ற வளர்த்தியும் வளர்த்திக் கேற்ற பருமனும் வாய்ந்து எங்தெந்த அவயவங்கள் எப்படியெப்படி அமைந்திருக்க வேண்டுமோ, அந்தப்படி நன்றாய் அமைந்து அழகுபெற்றிருந்தன. இத்தகைய அழகனது திருமுகவிலாசத்தையும், தோற்றத்தையும் கண்டாரனைவரும் இவன், கோலகொண்டா அழகிரிராஜாவின் செல்வப் புதல்வன் என்று தெரிந்துகொள்ளாமற் போயினும், கண்ணியம்வாய்ந்த ஒரு குடும்பத்து செல்வமிக்க ஒரு ஸ்ரீமானது திருக்குமரன் என்று அறிவர். இடதுகைச் சுட்டுவிரலுக்குப் பொருந்த அணிந்திருந்த உயர்ந்த விலையுள்ள வைர மோதிரமும், காதுக் கடுக்கன்களையும் தவிர வேறு நகையொன்றும் பூண்டிருந்தானில்லை. தனது தகுதிக் கேற்ற உடையுடுத்துப் பெருமித நடையுடைய இச்செல்வன் சரித்திரப்பிரசித்திபெற்ற ஓரங்கலின் தற்கால ஸ்திதியையும் அதன் பூர்வ சின்னங்களையும் காணவேண்டுமென்ற விருப்பத்தால் பகற் போசனத்தை முடித்துக்கொண்டு, வேலனை விடுதியிலிருந்து சாமான்களை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளும்படி திட்டப்படுத்தி விட்டு தான் மட்டும் தனியாக கால்நடையில் சென்றனன்.

"அப்துல் ஹஸாம் டாணுஷா" என்னும் மகமதிய அரசனது அதிகாரத்தின்கீழ் அப்பொழுது ஓரங்கல், சகல சம்பத்தும் பொருந்திய மேன்மையுடன் விளங்கியதெனினும், பிராசீன காலத்திலிருந்த மேலானசீர், சிறப்பு, செல்வம் முதலியவைகட்கு எத்துணையோ மடங்கு தாழ்ந்தும், பெருமைகுன்றியும் நீதி பிறழ்ந்தும் தீனநிலைமையிலிருப்பதைக்கண்டபோது தேசாபிமான மிக்க நமது ஆனந்தராஜாவுக்கு அதிகவருத்தமுண்டாயிற்று. அந்தோ! ஓரங்கல் சாம்ராஜ்ய பரமேஷ்டிக்கென்று சொல்லத்தக்க கணபதி தேவன், ருத்திரம்மதேவி, பிரதாப ருத்திரன் போன்ற பேரரசர்களது மேலான கொலுக்கூடங்கள் பார்வதி, லட்சுமி, சரஸ்வதிஎன்று சொல்லத்தக்க முத்தேவிகளின் ரத்தின பீடங்கள்

என்று மக்களால் பெரிதும் மதிக்கப்பெற்றும், மிகுந்த மேன்மைக்குக் காரணமாய் விளங்கியும், ருத்திரம்மதேவிக்கு நன்னீதி மேடையாய் சிறந்தும், ஆந்திர சம்ஸ்கிருத மகாகவிகளுக்கு பெரிய வைப்பு நீதியாய் விளங்கியும், திரிலோக சாம்ராஜ்ய லட்சுமிக்கு ரங்கஸ்தலமாகத் திகழ்ந்தும், காகதீய வமிசத்தார்களின் கீர்த்திப் பிரதாபங்கட்கு நல்லிருக்கையாக மேம்பட்டும், புகழ்க்கோர் பேரணியாகவும் பிரகாசித்திருந்த அவை காலப்பிசகால் முற்றிலும் சிதறுண்டு பாழ்பட்டுக்கிடப்பதைக் கண்டபோது அவனுக்குண்டான துக்கத்திற்கு அளவேயில்லை. பின்னர், பொய்யுடம்பு நீத்துப் புகழுடம்புபெற்ற பிரதாப ருத்திர..............................னது ஆஸ்தானத்தைப் பார்த்து அதன் பண்டைப்பெருமைக்கு மெச்சித் தலையசைத்துவிட்டு தூர்க்காலமென்னும் துராத்மாவால் அவ்வரிய இடத்திற்கும், நகரத்திற்குமுண்டான துர்த்தசைக்கு வருந்தினன். மதவெறி கொண்ட மகம்மதிய வீரர்களாலும், வன்மனம் வாய்ந்த அவர்களது படைகளாலும் நாசஞ் செய்யப்பட்டு பாழடைந்துள்ள அளவற்ற அழகிய அரண்மனைகளையும், அற்புதமான ஆஸ்தான மண்டபங்களையும் கணக்கற்ற தேவாலயங்களையும் பார்த்து அவைகள் பழமையில் விளங்கியிருந்த சீரையும், சிறப்பையும் எண்ணி வெகுவாகத் துக்கித்தான். முதன்முதலாக மகம்மதியர் ஓரங்கலின் மீது படையெடுத்து வந்தகாலத்தில் பிரதாப ருத்திரன் பெரும்படைகளும் வீரமிக்க அவைகளின் படைத்தலைவர்களுமேயன்றி, நாட்டின் நலத்தையும் தேசாபிமானத்தையும் கருதிய வீரமக்களாக விளங்கிய க்ஷத்திரியர், ரெட்டிகள், கம்மவார், வேளாளர் முதலியோர் தங்கள் தங்கள் மேலான கௌரவங்களை நினைந்து மறைந்துகொண்டு தேசத்துரோகிகள் போலாகாமல், பகைவர்களாகிய மகம்மதியர் நாட்டைக் கைப்பற்ற முன்னேறி வராமல் ஒவ்வோரடிதோறும் எதிர்த்து நின்று தடுத்துச் சமர்விளைத்த இடத்தையும் தேச நிமித்தமும், அரசன் நிமித்தமும், புகழ் நிமித்தமும், தங்கள் தேகத்தை துரும்பாக நினைத்து வீரங்காட்டி விண்புகுந்த நல்ல நிலத்தையும், பகைவர் கோபித்துத் தங்கள் மீதெறிந்த கொடிய ஆயுதங்கள் தேகங்களின் மீது பாய்ந்து பெருகிய இரத்தவெள்ளங்கள் பூமியை நனைத்தோடிய ஸ்தானத்தையும் பார்த்து கண்ணீர் பெருக்கி ஆ! பரமேச்

சுரா! தெலுங்கரசர் சார்பில் துணைநின்று காக்காமல் சென்ற காரணத்தினால் அல்லவாமகம்மதியர் நாட்டைக் கைப்பற்றிக் கொண்டனர். இஃதே உண்மையன்றி பிரதாப ருத்திரன் சௌரியக் குறைவினாலாவது அஜாக்கிரதையினாலாவது தோல்வியுண்டாகவில்லையென்பதை உணர்ந்துகொண்டு மற்றும், "ஊரடில்லி" 'ஓரங்கல்' முதலானவைகளையும் பார்த்துவிட்டு 'அனுபு, மலைக்குஞ் சென்று பத்மாட்சி தேவலாலயத்தையும் தரிசித்துக்கொண்டு, பழமையில் பௌத்தர்கள் வாழ்ந்துவந்த பள்ளிகளையுங்கண்டு அன்று மாலையே சாப்பாட்டு விடுதி சேர்ந்து மறுநாள் விடியற்காலம் கொண்டபல்லிக்கு பிரயாணமாவதற்கு ஏற்பாடு செய்தனன்.

ஐந்தாம் அத்தியாயம்.

போசனமும்—பொன்னம்மாளும்.

——(o)——

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து."

தான் ஜாகை செய்து கொண்டிருக்கும் சாப்பாட்டுவிடுதிக்கு வந்ததும் ஆனந்தராஜா தான் அணிந்திருந்த தலைப்பாகை, கோட், சர்ட் முதலான ஆடைகளைக் களைந்துவிட்டு, தனக்கெனத் தயாரிக்கப்பட்டிருந்த வென்னீரில் நன்றாக ஸ்நானஞ் செய்து, தோய்த் துலர்ந்த ஆடையுடுத்தி, நெற்றியில் திருநீறிட்டுத் தனிமையுள்ள ஓரிடத்திருந்து ஐம்புலன்களையும் ஒருவழிப் படுத்தி எல்லாம்வல்ல ஒரு முழுமுதற் கடவுளை மனமொழிகளால் வாழ்த்தி வந்தித்துத் தொழுதெழுந்து வணங்கிய பின் உணவுகொள்ள உள்ளே சென்றனன். செல்வர்களாயுள்ளவர்கள் தனது விடுதி தேடி சாப்பிட வந்திருப்பவர்களின் தகுதியைப் பொன்னம்மாள் முன்னரே அறிந்து, அவர்கள் விரும்பிப் புசிப்பதற்குரிய பதார்த்தங்களைத் தெரிந்து அவைகளைத் தனியாக நன்றாகச் சமைத்து அன்பாகப் பறிமாறி உபசரிப்பாள். (தொடரும்.)

பெற்றோர்களுக்கு ஒரு வார்த்தை

ச. தா. பா. மோகனதாஸ் எழுதுவது.

பெற்றோர்கள் என்று கூறப்படக்கூடிய நிலையில் உள்ள குடும்பங்களால் நிறையப்பட்டதே இவ்வுலகம். பிள்ளைகளின் சகல சவரக்ஷணைகளும் பெற்றோர்களுடைய ஆதரவிலேயே இருக்கின்றன. தங்களுடைய மக்களுக்கு உண்ண உணவும் உடுக்க ஆடையும் கொடுத்து, அவ்வப்போது வேண்டும் உதவியும் செய்துவிட்டதினாலேயே பெற்றார்களின் கடமையும் தீர்ந்துவிட்டதாக எண்ணி விடலாகாது. இவ்விஷயங்கள் உயிருள்ளயாவும் செய்துகொண்டுவருகின்ற விஷயமேயன்றி, மனிதர்கள் மட்டும் கருணையுடன் இக்காரியங்கள்செய்கின்றார்களெனக் கூறுவதற்கில்லை. ஆனால் மக்களின் பெற்றோர்களுக்கும், மாக்களினது பெற்றோர்களுக்கும் உள்ள வித்தியாசங்களோ நிரம்பவும் இருக்கின்றன.

மக்களின் மனோநிலை பலவிதமுள்ளது. அவர்கள் தங்கள் வாழ்க்கையைப் பண்படுத்திக் கொள்ளுவதற்காக இளமையிலேயே பக்குவப்படுத்தப்படுகின்றனர். இவர்களுக்கு கல்வியும், உணவும், ஆடையும் அவசியமே. ஆனாலும் இதைப்பார்க்கிலும் கவனிக்கவேண்டியதும் அவ்விஷயத்தில் அதிக சிரத்தை கொள்ளவேண்டியதும் அவர்களது மனோபாவத்தைப் பற்றியேயாகும். தங்கள் குழந்தைகளை பட்சத்துடன் நேசித்து, அவர்களது இனிய மொழிகளைக் கேட்டுக்குதூகலிக்கும் எத்தனையோ பெற்றோர் பின்னால் தீராக்கவலைக்கும் துன்பத்துக் ஆளாகி நிற்பதைக்காண்கிறோம். இவைகட்குக் காரணமென்னவென்பதை யோசியாமற் போகக்கூடாது. ஓர் காலத்தில் இவர்கட்கு இன்பத்தை அளித்துக்கொண்டிருந்த பிள்ளைகள், பின்னொருசமயம் துன்பத்தைக் கொடுக்கின்றவர்களாயின், இதன் குற்றம் யார்மீது என்பது தெரியுமாயின், அக்குற்றத்தைக் களைந்து, எப்போதும் சந்தோஷமான நிலையிலிருக்கலாமன்றோ? அதற்கான இரண்டொரு முக்கியமான காரணங்களை ஈண்டு கவனிப்போம்.

குழந்தைகளோடு நெருங்கி உறவாடக்கூடியவர்கள் பெற்றோர்களே. இவர்கள் தங்கள் பிள்ளைகளின் மனோநிலை யாதென்பதை அடிக்

கடி ஆராயவேண்டும். அதாவது அவர்கள் மனம்கடினமுள்ளதா? இரக்க முள்ளநிலையிலுள்ளதா? என்னென்ன விஷயங்களில் இவர்களுடைய ஆராய்ச்சி செல்லுகின்றது என்பதான விஷயங்களை இளமையிலேயே அறிந்துகொள்ள முயலுதல் நன்று. இஃது மிக எளிதான காரியமுமாகும். சில பெற்ருேர்கள் இவைகளைப்பற்றிக் கேட்டால், தங்கள் பிள்ளைகள் மதுபானம்செய்வதில்லை; துர்ப்பாஷைகள் பேசுவதில்லை; சண்டைபோடுவதில்லை; மிகுந்த புத்திசாலிகளாயிருக்கின்றனர் என வாஞ்சையுடன் கூறிவிடுவார்கள். பிள்ளைகளின் மனோநிலையைப்பற்றியோ அவர்கள் எதுவுமே அறியாமலிருக்கின்றனர்.

கடவுள் மக்களை உலகில் சிருஷ்டிக்கும்போது ஒவ்வொருவருக்கும் அரிய சில வரங்களைக் கொடுத்தே தீருகின்றனர். இளமையிலிருந்து யாரார் என்னென்ன முறையில் பழக்கப்பட்டு வருகின்ருர்களோ, அவ்விஷயம் நாளடைவில் வலுத்து அவரவர்களின் பழக்கவாசனைக்குத் தக்கபடி பலனை அளித்துவிடுகின்றது. ஓர் பிள்ளையின் மனோநிலை சித்திரக்காரனுக போகவேண்டுமென்றிருந்தால், அவனை அத்துறையிலேயே பழக்கி, வெற்றிபெறும்படிசெய்தால் அவன் தேர்ந்த சித்தரக்காரனுகிவிடுகின்ருன். மற்ருெரு பையன் வியாபாரத்துறையில் ஆவலுள்ளவனுயிருப்பின் அவனை அதற்கேற்றவாறு பழக்கி வியாபாரம் செய்யும்படி செய்தால் அவனுடைய நிலைமையும் வெகு நன்ருயிருக்கும். இதைவிடுத்து இத்தகைய மனோபாவமுடையவர்களைக் குமாஸ்தாக்களாகவும், வக்கீல்களாகவும் போகும்படி நிர்ப்பந்திக்கும்போது அவர்களது மனோநிலையில் ஓர் பெரிய தடை குறுக்கிட்டு, அவர்களுடைய முற்போக்கையும் தடுத்துவிடுகின்றதென்பது நிச்சயம். இவர்கள் தங்கள் பெற்ருேர்களின் நிர்ப்பந்தத்திற்கென்று மட்டும் இணங்கியவர்களாக, தங்கள் மனதிற்குப் பிடிக்காத வேறுதுறையிலிறங்கி, அல்லற்படுகின்றனர். இப்பொறுப்பு பெற்ருேர்களைச் சார்ந்ததா? இல்லையா வென்று வினவுகின்ருேம். எப்போதுமே பெற்ருேர்கட்கு பரந்த நோக்குடைய மனமும், விசால திருஷ்டியும் வேண்டுமென்று வற்புருத்திக் கூறுவேன். சில பெற்ருேர்கள் தங்கள் குடும்ப பாரத்தைத் தாங்கமாட்டாமல் கஷ்டப்படும்போது, இன்னமும் கொஞ்சம் பொறுமையோடிருந்து இக்கஷ்டங்களைச்சமாளித்து வெற்றியடைவதற்குப் பதிலாக, தங்கள் பிள்ளைகள் சிறிதுவயது வந்தவர்களை, எங்கேயாவது சொற்பசம்பளம் கிடைப்பினும் அநுப்ப இணங்கிவிடுகின்றனர். தங்கட்கு அவ்வப்போது ஏதாயினும் சிறு தொகை கிடைத்தாற் போதுமென அந்நிலையில் எண்ணுகின்ருர்களே யொழிய, பின்

காலத்தில் நீடித்தகாலமாய் இருந்து இவ்வுலகில் வாழ்க்கையைப் பெறவேண்டிய, பிள்ளைகளின் நன்மையைக் கருதுகின்றார்களில்லை. தாங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் அதினால் பரவாயில்லை; தங்கள் பிள்ளைகளின் க்ஷேமமே பெரிது என வருத்தப்பட்டாயினும், பிள்ளைகளை முன்னுக்குக்கொண்டுவந்த பெற்றோர்களும் பின்காலத்தில் சுகமேயிருக்கின்றனர். பிள்ளைகளும் நன்னிலையிலிருக்கின்றார்கள். எப்போதுமே கஷ்டத்தையும், துன்பத்தையும் கண்டு மலைக்கின்றவர்கள் குடும்பபாரங்களை நிர்வகிப்பது துர்லபம். எதுவரினும் வருக, அனைத்தையும் சமமாகக்கொண்டு வாழ்க்கையை இனிப்பாக்கிக்கொள்ள முயல வேண்டும்.

பிள்ளைகளுக்குக் குறிப்பிட்ட சில சுதந்தரங்களைப் பெற்றோர்கள் தாராளமாயளிக்கவேண்டும். இந்நாட்டில் இன்னொரு கொடிய காரியம் என்னவெனில் பெற்றோர்களைக் கண்டால் பிள்ளைகள்பல சிங்கங்களைக் கண்டது போற்றான். பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் உரிய நேசமும், மரியாதையும், கீழ்ப்படிதலும் தனியே அமைக்கப்பட்டிருக்கும் ஓர் தெய்வீக ஒழுங்காகும். இதற்காகப் பெற்றோர்களைக் கண்டால் வாய்பொத்தி, கைகட்டி, இடுப்பில் மேல்வேஷ்டியைக் கட்டிநின்றால் மட்டும் மரியாதையும் பிள்ளைகளின் முன்னேற்றமும் வந்துவிட்டதென்று கூறமுடியுமா? இது வோர் மௌடீகமான காரியமென்றே கூறுவேன். பிள்ளைகள் பெற்றோர்முன் தாராளமாய்ப் பேசக்கூடாதபடி அநேகவிதமான வாய்ச்சட்டசள், இந்நாட்டுக் குடும்பங்களில் போடப்பட்டிருக்கின்றன. இதனால் பிள்ளைகள் பயந்து, மனம் தோய்ந்துபோனவர்களாய், நரம்புத் தளர்ச்சியால் கோழைகளாய், பேடிகளாய், துன்பங்களைக் கண்டு அதை மேற்கொள்ள திராணியின்றி அஞ்சிய மனத்தினராய் வாடிவிடுகின்றனர். பிள்ளைகள் இயற்கையிலேயே அழகும் நற்குணமும் வாத்ஸல்யமும் உற்சாகமும் மாசற்ற மனதும் உடையவர்கள். அவர்களது இன்சொல்லும், நன்மொழிகளும் கன்மனதையும் கரைக்கக்கூடியவை இத்தகையவர்களை குரூரர்களாயும், லோபிகளாயும், கோழைகளாகியும் பெற்றோர்கள் செய்துவிடுவது பெரிய தோஷமென்றே கூறலாம்.

குழந்தைகளின் க்ஷேமமே குடும்பங்களின் இன்பமாகும். பெற்றோர்கள் பிள்ளைகளை வளர்ப்பதிலும், போஷிப்பதிலும், அவர்களை வாழ்க்கையின் பாதைகளில் கொண்டுபோய்ச் சேர்ப்பதிலும் தகுந்த கவனம் செலுத்தவேண்டும். இக்குறைகளால் இப்போதுள்ள துன்பங்கள் கொஞ்சமன்று. நமது எதிர்கால சந்ததியார் வீரமுள்ளவர்களாய், பவிருஷமுள்ளவர்களாய், சந்தோஷமுள்ளவர்களாய் இந்நாட்டில் விளங்கவேண்டுமென்பதே எனது அவா.

வனிதா ரத்னம்

அல்லது

மாசற்ற மாமணி.

திரு. ச. தா. பாலையா பிள்ளை அவர்கள்.

(சென்ற மாதத் தொடர்ச்சி)

ஊசியைக் காந்தம் இழுப்பதே போன்றே அப்பெண்ணின் அழகுமட்டுமன்று, அவள் முகத்தில் புன்னகை பொலிந்து ஒளிரும் தேஜஸ் ஓர் தனி அழகாயிருந்து என் இருதயத்தைக் கொள்ளை கொண்டுவிட்டது. அவளும் மகா உத்தமசிரோரத்னமே. எனினும் தன் கண்களால் ஒவ்வோர் சமயம் என்னை ஊடுருவிப் பார்த்தது, அதிலுள்ள இரகசியத்தை நன்கு காட்டா நின்றது. நான் சந்திக்கும் ஒவ்வோர் சமயமும் எங்களிருவரின் கண்களும் காதல் ததும்ப சந்தித்ததென்றே கூறவேண்டும். இவ்வித கண்களின் அருட்பார்வை இருக்கும்போது, வாய்ச்சொற்களே தேவையில்லை என உலக வழக்கு இருக்கிறதை நீயும் அறிந்தவனே. அதிலிருந்து இப்பெண் எங்கு எந்த வகுப்பில் வாசிக்கின்றாளென்பதை அறியலானேன். இவ்வளவே விஷயங்கள். இனி நடக்கவேண்டிய காரியங்களோ அபாரமாயிருக்கின்றன.

வேணு:—வெகு நல்லகாரியம் செய்துவிட்டாய். நீ அந்தப் பெண்ணைப்பற்றி இவ்வளவுதான் தெரிந்திருக்கின்றாய். அதற்குள்ளாகவே இவ்வளவுதூரம் சபதங்களும் செய்துவிட்டாய். அப்பெண், ஓர் வேளை சம்மதிப்பதாக வைத்துக்கொண்டாலும், அவளுடைய வீட்டிலுள்ளவர்கள் சம்மதிக்கவேண்டும். எனக்கு அதுவொன்றே சந்தேகம். மற்றப்படி உன் கல்விக்கும், உயர்ந்த குணங்கட்கும், அப்பெண், இதுவிபரம் அறிவாளாயின் தானாகவே

உன்னை மணக்கவிருப்பினும் விரும்புவாள். நீ செய்யவேண்டிய தெல்லாம், முதலாவது அப்பெண்ணைத் தனிமையில் வைத்துப் பேசவேண்டும். இதற்கு சந்தர்ப்பம் எதுவென்பதைத் தீர்க்கமாய் ஆலோசனை பண்ணிக்கொள். முதலாவதாக திடீரென வார்த்தைகளைப் பிரயோகித்துவிடாதே. கனிந்த சொல், இனிய பார்வை, உயர்ந்த லட்சியம் இவைகளே உன்முயற்சிக்கு அணிகலன்களாயிருக்கட்டும். பின், அவளது வீட்டில் யாராருடைய சம்மதத்தைப் பெற வேண்டுமென்பதை கவனித்துப்பார். தேசிங்கு! இதற்காக மனதை அதிகம் புண்படுத்திக்கொள்ளாதே. நமக்கோ பரீட்சை சமீபமாயிருக்கின்றது. நமக்குள்ள பாடங்களோ மிக அதிகம். இப்பரீட்சையில் வெற்றியடைந்த பிறகே நமது வாழ்க்கைக்கு எத் தொழில் ஏற்றதோ, அதைத் தீர்மானித்து ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கின்றது. அதுவரையிலும் நிதானமாய்ச் செல்வதே மேலானதாகும். நான் பீ. ஏ. தேறியதும் டாக்டர் வேலைக்குப் படிக்கவேண்டுமென்றே எண்ணுகிறேன். நீயோ இஞ்சினீயராகப் படிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் இப்போதே செய்திருக்கிறாய். நமது வாழ்நாட்கள் இனிதே நடைபெற, நமது குடும்பங்களைச் செவ்வையுடன் நடாத்த, இத்தகைய உத்யோகங்களே தேவை.

தேசிங்கு:—வேணு. என்ன! அவ்வளவுசீக்கிரம் உன் முடிவைத் தெரிவித்துவிட்டாய். நாம் படித்ததும் உத்யோகத்திற்கென்றே நம்மைப் பலிகொடுத்துவிட வேண்டுமென்பது கட்டாயச் சட்டமா? இங்ஙனமே படித்தவர்களெல்லாரும் உத்யோகமே வேண்டுமென்றால் இடமெங்கேயிருக்கின்றது. இவ்விதம் உத்யோகம் ஒன்றிற்காக மாத்திரம் நாம் படிக்கின்றோமென்றால், இதனால் நமது தேசத்திற்கு என்ன நன்மை? யாவரும் உத்யோகம் செய்துவிட்டால் ஓர் தேசம் விவசாயம், வியாபாரம், கைத்தொழில் முதலியவைகளில் என்றுதான் அபிவிருத்தியடைவது? கல்வி என்பது மனிதர்களின் அறிவைப்பெருக்கும் சாதனமாயிருக்கவேண்டுமேயன்றி, அடிமைப்பட்டு மரணமட்டும் உழைத்து சாவதற்கன்று. நமது நாட்டில், இவ்விதமான எண்ணங்கொண்டே ஆயிரக் கணக்கான பட்டதார்கள் வேலையின்றி, வீணே வருந்தி, மன

முடைந்து அல்லற்படுகின்றனர். சாதாரண கூலிக்காரனைவிட இப்பட்டதாரிகளின் நிலைமை எவ்விதத்திலும் மேலானதாயிருக்கின்றதா? நன்ருய் யோசித்துப்பார். நாமிருவரும் பீ. ஏ. பரிட்சையில் வெற்றிபெறுவது நிச்சயமே. உடனே இப்போது தீர்மானித்து விட்டதுபோல் செய்துவிட என்மனம் முன்வரவில்லை. நான் பாங்கி ஒன்று ஏற்படுத்தி, அதில் கூட்டுப் பங்காளியாக நீயும் இருந்து வேலைசெய்ய வேண்டுமென ஓர் திட்டம் தயாரித்துக் கொண்டிருக்கிறேன்.

வேணு:—அன்ப, நான் ஓர் வரிபோடுவதற்குள் நீ சரமாரியாய் அடுக்கிவிட்டாயே. நமது அதிர்ஷ்டம் எவ்வாறு அமைக்கப்பட்டிருக்கின்றனதோ, அதனை நாம் அறியோம். நீ கூறிய யாவும் வாஸ்தவமேயாகும். நல்லது. தேசிங்கு நேரமாகின்றது. 'நமது இருப்பிடத்திற்குப் போகலாம் எனக்கூற தேசிங்கும் வேணுகோபாலனும் மிகுந்த உல்லாசத்துடன் அவ்விடத்தைவிட்டுச் செல்வாராயினர்.

2-ம் அத்தியாயம்.

மதுரையம்பதியில், அழகுக்கு அழகு செய்வதே போன்று ரயில்வே ஸ்டேஷனை யடுத்து ஓர் பெரிய கட்டிடம் இருக்கின்றதை யாவரும் அறிவர். மேன்மாடிகளாலும், உப்பரிகைகளாலும் கட்டப்பட்டு, கடியார கோபுரத்துடன் விளங்கும் இக்கல்லூரி பெண்களுக்கென ஆக்கப்பட்டதாகும். இதற்கு ஏராளமான பெருந்தொகையை நன்கொடையாகக் கொடுத்ததற்காக கொடுத்த அம்மையார் பெயரால் சொர்ணம்மாள் காலேஜ் என அழைக்கப்படுகின்றது. இதில் நாம் எழுதும் சமயம் ஒன்பதாம் வகுப்பு மாணவிகள் பூச்சித்திரத் தையல் வேலைகளைச் செய்துகொண்டிருந்தனர். அவர்களது உபாத்தியாயினியாகிய பாட்ரிக்ஸ் என்னும் ஆங்கில அம்மையார் ஒவ்வொருவருக்கும் உரிய தொழிலைச் செய்யும்படி கட்டளையிட்டு தான் அவைகளை மேற்பார்வை செய்து

கொண்டிருந்தார். ஓரிடத்தில் இரண்டொரு பெண்களும், இன்னும் பல இடங்களில் சில பெண்களுமாகக்கூடி உட்கார்ந்து தையல் வேலைசெய்துகொண்டிருந்தனர். பிறிதோர் பக்கம் மூன்று பெண்கள் குழுமியிருந்தார்கள். இவர்கள் சம்பாஷணைசெய்துகொண்டே தங்கள் பாடங்களையும் முடித்துக்கொண்டிருந்தார்கள். இக்கூட்டங்களில் பல நக்ஷத்திரங்களின் மத்தியில் ஒளிவிட்டொளிரும் உடுக்கண் என ஓர் அழகிய இளநங்கை தனிமையாக உட்கார்ந்து தையல் வேலையை முடித்துக்கொண்டிருந்தாள். இவளுடைய கண்களும், கைகளும் தம் தம் தொழில்களைச் செய்துகொண்டிருந்த போதிலும், மனம் மாத்திரம் நிம்மதியடையாது, எதையோ சிந்திப்பதும், அவற்றிற்கு வழி தெரியாது திகைப்பதும், அவள் முகத்தில் தெற்றெனத் துலங்கிற்று. சற்றேறக்குறைய பதினேழு வயதுடைய அவ்வொண்டொடி மின்னலொளி போன்று சுவர்ணகாந்தியுடன் விளங்குவாளாயினள். தேஜோமயமாய் அவளது முகம் பிரகாசித்து அழகை அள்ளி ஜிலு ஜிலுவென இறைத்து தாவிக்கொண்டிருந்தாலும், அடிக்கடி அவள்முகம் மாறுதலடைவதும், தெளிவதும் பின்னர் திகைப்பதுமாகவே இருந்தது. கொழு கொழுவென திரண்டுருண்டு தங்கப் பிரதிமைபோல் வாய்ந்து, அவ்வழகுக்கேற்ற நாகரீக அணிகலன்களும் அணிந்து, மைசூர் தர்பார் புடவையெனும் அழகிய சேலையும் உடுத்தி, மகமல் ஜாக்கட்டும் அணிந்து, வைரங்களின் டால்கள் ஓர் பக்கம் காந்தியளிக்க, பிறிதோர் பக்கம் அவள் கன்னங்களின் பிரபை சொல்லொணாக் காட்சியாயிருந்தது. மெல்லிய பாவையே போன்று அம்மேனகாரத்தினம் வீற்றிருக்கும் சொகுசும் செப்பத்தரமன்று. கடவுள் இப்பூவையை ஆபூர்வ சிருஷ்டியாக ஆக்கியும், இன்று ஏன் இவ்வளவு கவலைக்குள்ளாக்கினரோ என நினைக்கும்போது நமக்கும் சிறிது வருத்தமாகவே இருக்கின்றது. இங்ஙனம் ஊசலாடிய இந்நிலையிலுள்ள இக்கற்பகத்தின்பூங்கொம்பே வனிதாரத்னமாகும். இவளது ரூபத்திற்குகேற்ப பெயரும் வனிதாரத்னம் என அமைக்கப்பட்டது ஓர் விசேஷமே. இனி இப்பெண்மணியை வனிதாரத்னம் என்றே அழைப்போம்.

(தொடரும்)

கல்வி.

திரு. சி. என். அனந்தசுப்பன் அவர்கள் எழுதுவது.

இந்த உலகத்தில் நாம் பார்க்கும் தேசங்கள் பல, இத்தேசங்கள் எல்லாம் மாறுதல்கள் அடைந்துகொண்டே வருகின்றன வென்பது வெளிப்படை. சென்ற நூற்றாண்டில் இருந்துவந்த நிலைமைக்கும் இன்று இருக்கும் நிலைமைக்கும் எவ்வளவோ வித்தியாசமிருக்கின்றது. அநேக விஷயங்களில், பற்பல தேசங்கள் நாம் ஆச்சர்யப்படும்படியாக முன்னேற்றமடைந்திருக்கின்றன. ஒரு தேசம் விவசாயம், கைத்தொழில், ரசாயனம் முதலிய விஷயங்களில் விருத்தியடைய வேண்டுமென்றால், அவைகளுக்கு மூலாதாரமாக இருப்பது கல்வியே. இந்தக் கல்வியானது விருத்தியடையாவிட்டால் எந்தத் தேசமும் எந்தத் துறையிலும் முன்னேற்றமடைவது மிகவும் ஸ்ரமம். இன்று மிகவும் நாகரீகமானவை என்றும் ரசாயன சாஸ்திரத்தில், போதிய முன்னேற்றம் அடைந்திருக்கின்றனவென்றும், கூறப்படும் தேசங்கள் அமெரிக்கா, ஜெர்மனி, இங்கிலாந்து முதலானவை. ஜப்பான் தேசமானது மிகவும் சொற்ப காலத்தில் விசேஷமாக வியாபாரத்தில் முன்னேற்றமடைந்திருப்பது பாராட்டத்தக்கது. சென்ற 30, 40 வருஷங்களுக்கு முன் ஜப்பான்தேசம் இருந்துவந்த நிலைமையை யோசிக்குங்கால் இன்று அத்தேசம் இவ்வளவு பெருமையோடு விளங்க சில காரணங்கள் இல்லாமற் போகாது என்ற முடிவிற்கு நாம் வருவோம். 50 வருஷங்களுக்கு முன் ஜப்பானில் 100-க்கு 10 பேர்கூட கல்வி கற்றவர்களாக இருக்கவில்லை. ஆனால் இன்று கல்வி கற்றவர்களின் தொகையானது 100-க்கு 90 ஆக இருக்கிறது. சொற்ப காலத்தில் கல்வி கற்றவர்கள் தொகை அவ்வளவு அதிகரித்திருக்குமானால் அதற்கு தேச ஜனங்களும் கவர்ன்மெண்டாரும் எவ்வளவு பாடுபட்டிருக்கவேண்டும் என்பதையும் கல்வியின் அபிவிருத்தியைக் குறித்து எவ்வளவு ஊக்கங் கொண்டிருக்கவேண்டும் என்பதை வாசகர்களே யூகித்துக்கொள்ளலாம்.

கல்வியின் அபிவிருத்தியினுல்தான் தேசத்து பாமர ஜனங்கள் அறியாமை நீங்கும். அந்த அறியாமை நீங்கினுல்தான் எந்தவித சீர்திருத்தமும் கைகூடும். கல்வி என்பது யென்ன? கடவுள் கொடுத்த அறிவானது நமக்கு எற்கனவே இருக்கிறதென்ருலும், அந்த அறிவை விருத்திசெய்துகொள்ள பிரயத்தனப்படுவது ஒவ்வொருவனுடைய கடமையாகும். விளக்கு நன்ருக எறிவதற்கு எவ்வளவு தூண்டுவது அவசியமோ, அவ்வாறு அறிவு என்னும்படியான பிரகாசமான விளக்கு நன்ருகப் பிரகாசிக்க 'கல்வி' என்னும் தூண்டுகோல் அவசியம். இந்தியாவிலேயே பண்டை நாட்களிலே குருகுலங்கள் பலவிருந்ததாகவும் கல்வியானது நன்ருகப் பரவியிருந்ததாகவும் நாம் சரித்திரங்களால் அறிகிருேம். உலகத்தில் வேறு பல ஜாதியார்கள் நாகரீகம் இன்னதென்று தெரியாது பச்சை இலைகளையும் கிழங்குகளையும் தின்றுவந்த சமயத்தில், நாகரீகம் இன்னதென்பதையும், மனித வாழ்க்கையை எவ்வாறு நடத்தவேண்டுமென்பதையும் மனிதனுடைய நோக்கமானது என் தெய்வத்தை அடைவதிலேயே இருக்கவேண்டும் என்பதையும் இந்தியாவானது ஆதி காலத்திலேயே பிறதேசங்களுக்கு போதித்து வந்திருக்கிறதென்ருல் கல்வியானது எவ்வளவு விசாலமாக அக்காலத்தில் இருந்திருக்கவேண்டும் என்பதை ஈண்டு கூறவும் வேண்டுமோ? அவ்வுன்னத நிலைமையில் இருந்த தேசமானது இன்று எந்நிலைமையிலிருக்கிறது? 160 வருஷகாலமாக அடிமை வாழ்வில் இருந்துவந்ததன் பலனுக 100-க்கு 10 பேர்கள்கூட கற்றவர்களாகவில்லை. இந்த அவமானம் யாரைச் சார்ந்தது? 100க்கு 90 பேர் எழுத்து வாசனையே அற்றவர்களாக இருப்பார்களாயின் தேசமானது என்ன முன்னேற்றமடைய முடியும்? நாம் இப்பொழுது ஸ்வதந்திரம் வேண்டும் என்கிருேம். நம்முடைய கைத்தொழில்களும் நூல் நூற்கும், நெய்யும் தொழில்களும் வியாபாரமும் விருத்தியடையவேண்டும் என்கிருேம். இவைகள் விருத்தியடைய வேண்டுமாயின் முதலில் நாம் நமது கவனத்தைக் கல்வியில் செலுத்தவேண்டும். எந்த கைத்தொழிலாகட்டும், அது செழிக்கவேண்டும் என்ருல் கல்வி அவசியம் என்பதை நாம் மறக்கக்கூடாது. ஐரோப்பிய நாடுகள் எல்லாம் இன்று வியாபாரத்திலும் கைத்தொழில்களிலும் விருத்தியடைந்திருப்பதற்குக் காரணம் அத்தேசத்தார்கள் கல்வியின்மேல் வைத்துள்ள ஸ்ரத்தையே ஆகும். கல்வி அபிவிருத்திக்காக அவர்கள் பணம் எவ்வளவானுலும் செலவு செய்யச் சற்றும் பின்வாங்குவதில்லை. அவ்வாறு செலவழிக்கும் பணமானது தேசத்திற்கு ஓர் பெரிய நிதியைச் சேர்த்து வைப்பதற்காகச்

செலவழித்தலே யென நினைக்கிறார்கள் அச்சிறுவர்கள் போதிய கல்வியைக் கற்றுக்கொண்டவுடனே ஏதாவது கைத்தொழிலில் இறங்கிவிடுகிறார்கள். அந்தக் கைத்தொழில் கல்வியில் விசேஷ பாண்டித்தியம் பெற்றவர்களே தொழிற்சாலைகள் ஏற்படுத்தி ஏராளமாகப் பணம் சம்பாதிக்கிறார்கள். இனிமேலாவது, நமது பெற்றோர்கள் சிறுவர்களது கல்வி விஷயமாக போதிய ஊக்கங் காட்ட முன்வரவேண்டும். 10 ரூ. சம்பளம் கிடைத்தால் போதும் என்ற நோக்கத்துடன் கற்கும் கல்வி உண்மையான கல்வி அல்ல.

நம்முடைய கல்வியானது சுயேச்சையாக பணம் சம்பாதிக்க உபயோகமாய் இருப்பதும் தவிர, தேசத்திற்கும் பிரயோஜனப் படும்படியாக இருக்கவேண்டும். தேசம் என்று ஒன்று இருக்கிறது; அது முன்னேற்ற மடைய பாடுபடவேண்டும் என்ற உணர்ச்சியானது நமது சிறுவர்களுக்கு உண்டாகக்கூடிய கல்விதான் தற்காலத்திற்குச் சிறந்ததெனக் கூறலாம், ஆங்கிலம் கற்று பட்டம் பெற்றுவிட்டால் மட்டும் போதாது. நமது தேசத்தில் இப்பொழுது ஆயிரக்கணக்கான பட்டதாரிகள் இருக்கிறார்கள். எண்ணிக் கையற்ற ரூபாய்களைச் செலவழித்துப் பட்டங்களைப் பெற்றிருக்கிறார்கள். ஆனாலும் என்ன? அவர்களால் தேசத்திற்கு எந்த விதமான பிரயோஜனமுமில்லை. ஆகையால் இந்த கல்வி முறையானது தேச முன்னேற்றத்திற்கு ஏற்றதல்ல. இதை மாற்றியோ அல்லது திருத்தியோ நமதிஷ்டப்படியும் அவசியத்தின்படியும் நாம் கல்வி முறையை அமைத்துக்கொள்ளவேண்டும்.

சுருங்கக் கூறுமிடத்து இந்தியாவின் முன்னேற்றத்தை விரும்பும் ஒவ்வொருவரும் கல்வியை எவ்வளவு சீக்கிரம் பரப்பமுடியும் என்பதையே யோசனை செய்யவேண்டும். மற்றச் சீர்திருத்தங்கள் நிறைவேற வேண்டுமானால், அவைகளுக்கு அஸ்திபாரமாக இருப்பது கல்வியே. இது விருத்தியடைய அடைய மற்றவைகளும் விருத்தியடையும் என்பதிற் சந்தேகமில்லை. தினசரி வாழ்க்கையிலும் இதன் அவசியத்தைச் சொல்லி முடியாது. சாதாரண சுகாதார முறைகளை அநேகர் உணராததால் எவ்வளவு பிணிகளுக்கு நமது மக்கள் ஆளாகிறார்கள்? இவைகளை எல்லாம் உணர்ந்துதான் நமது தேசத் தலைவர்களும் மற்றும் உள்ளோர் எல்லோரும் இப்பொழுது ஆரம்பக்கல்வியைப்பரப்பவேண்டிய அவசியத்தைக் கூறுகிறார்கள்.

மற்ற தேசத்தாருடன் இந்தியாவும் சமமாய் இருக்க வேண்டுமாயின் நாம் அனேக விஷயங்களில் இன்னும் சீர்திருத்த மடைய வேண்டும். அவைகளைப்பற்றி பின்னால் யோஜிப்போம். இப்பொழுது வேண்டுவதெல்லாம் கல்வி ஒன்றே என்று கூறிஇச்சிறு கட்டுரையை முடிப்போம்.

விகடத் துணுக்குகள்.

அ:— ஒரு கரண்டி காலணு விற்கிறீர்களே! அச்சிறு கரண்டி எதற் கையா?

ஆ:— பிராம்மணர் சாப்பாட்டுக் கடைகளில் நெய்விட உதவும்.

ஃ ஃ ஃ

வெள்ளையன்;— என்னமுதலாளி. நம்மள் வீட்டு ஐயருக்கு 100 ரூபாய் சம்பளங் கொடுக்கிறீர்களே அவரால் உங்களுக்கு என்ன மிச்சம்?

முதலாளி:— அவர் சம்பளத்திற்குமேல் 100 ரூபாய் மிச்சம்.

வெள்ளையன்:— எப்படி?

முதலாளி:— வீட்டிற்கு வரும் யாசகக் காரர்களுக்குக் கணக்கு வழக்கில்லை. வாசலிலிருந்துகொண்டே அவர்களுக்குப் பதில் சொல்லிவிரட்டிவிடுகிறாரல்லவா? அதில் தான்.

ஃ ஃ ஃ

சைவன்:— என்னையா கிளப்புக்காரரே. பிராம்மணனுக்கும் பரியாரிக்கும் ஒரே இடத்தில் சாப்பாடு போடுகிறீர்?

பிராம்மணர்:— இது தெரியாதா? பிராம்மணனுக்குப் பார்ப்பான் ஒருவன் தவிர மீதம் யாவரும் சமம்தான்.

ஃ ஃ ஃ

உபாத்தியாயர்:— அடே கோ. சுப்பா. கிருத்திகையில் க்ஷவரஞ் செய்துகொள்ளுகிறாயே அது பாவமல்லவா?

சுப்பன்;— என்ன ஸார். பழனியில் போய்பாருங்கள் எத்தனை தலைகள் கிருத்திகையில் க்ஷவரஞ்செய்துகொள்ளுகின்றன.

ஃ ஃ ஃ

ராமன்:— அடியேய் சீதா. குழந்தையைக் காற்றில் போட்டிருக்கிறாயே அது தாங்குமா? கம்பிளியை எடுத்து மேலே போடு.

ஓதா:— ஆமாம் போங்க காற்றைத் தாங்காத குழந்தை கம்பிளியைத் தாங்குமாக்கும்.

ஃ ஃ ஃ

ஓட்டல் முதலாளி:— ஓய் சுப்பையரே என் பேப்பர் வி. பி. யைத் திருப்பிவிட்டீர்?

சுப்பையர்:—பேப்பருக்குத் தபால்காரன் இங்கே ரூபாய் தந்தால் தான் வி. பி. யைத் தருவேன் என்றான் சென்னைப் பேப்பருக்கு இங்கு தபால்காரனிடம் பணங் கொடுக்க நான் என்ன முட்டாளா?

ஃ ஃ ஃ

சோமன்;— என்னடா தீண்டாதவனைத் தீண்டிப் பேசுகிறாய்?

ராமன்:— நான் பட்டுவேஷ்டி கட்டியிருக்கிறேன். அதனால் தீண்டலில்லை.

ஃ ஃ ஃ

வாலிபன்:— ஐயா வைத்தியரே உலகத்திலுள்ள ரசங்களில் எந்தரசம் உயர்ந்தது?

டாக்டர்:— கொத்தமங்கலம் மணிரசந்தான்.

நந்தன்:— ஓய் சாமியாரே நீர் பழுத்துக் கொழுத்துப் போய் பட்டைபட்டையாய் விபூதியும் ருத்திராக்கமும் பூண்டிருக்கிறீர். ஏன் மாமிசம் சாப்பிடுகிறீர்.

சாமியார்:— மோக்ஷத்திற்குப்போக.

நந்தன்:— அதென்னையா மாமிசம் சாப்பிட்டால் கிட்டும் நரகம் என்பார்கள். நீர் மோக்ஷ மென்கிறீரே எப்படி?

சாமியார்:— நானா சொல்லுகிறேன். திருவிளையாடர்புராணந் தானுஞ் சொல்லுகிறது. மாமிசத்தையே தினந்தின்ன கண்ணப்பன் மோக்ஷத்தை யடைந்தானென்று.

மின்மினி.

(பாற்கடலோன் திரட்டுவது.)

புராதன பொக்கிஷம்.

மிகப் புராதனமான இஜிப்டு தேசத்தில் பழைய சின்னங்களைப் பரிசோதிக்கும் ஆராய்ச்சியாளர், தாம் பல வருஷங்களாகச் செய்த ஆராய்ச்சியின்பயனாக இப்போது அற்புதமான இரு பொக்கிஷ அறைகளைக் கண்டுபிடித்திருப்பதாகத் தந்தி செய்திகள் கூறுகின்றன. அத்தந்தியில் இந்நூற்றாண்டில் கண்டுபிடித்த ஆராய்ச்சியின் வெற்றியைப்போல் எப்பொழுதுமே கண்டதில்லையென ஆச்சரியப்படுவதாகத் தெரிகிறது. அச்செய்தி அடியில் வருமாறு:—

கி. மு. 1350-ம் ஆண்டு முதல் 1358 ம் ஆண்டுகள்வரை குடாங்கம் என்ற அரசன் இஜிப்டுதேசத்தை ஆண்டுவந்தான். அவனுக்கு முன்னிருந்த அரசர்களில் 'ஆடேன்' என்பவன் சூரிய ஆராதனை செய்யும் மதத்தை விலக்கி 'எமென்' என்ற நூதன மதத்தைக் கைக்கொண்டான். அங்ஙனம் கைக்கொண்டிருந்த அவன் இறந்த பல ஆண்டுகளுக்குப் பின்னர் அவனது கல்லறைக்குச் சமீபத்தில் நிலத்தைப் பரிசோதனை செய்தபொழுது ஆச்சரியப் படத்தக்க இரு பொக்கிஷ அறைகள் காணப்பட்டன. அப் பொக்கிஷ அறைகளில் அடியில்கண்ட அற்புத சாமான்களின் ஜாபிதாவொன்றை அதனை ஆராய்ந்து கண்டுபிடித்த 'கார்டா' என், பவர் வெளியிட்டிருக்கின்றார். அது வருமாறு:—

முதல் அறையில்:—அரசன் சயனிக்கும் கட்டில் ஒன்று தங்கமுலாம் பூசப்பட்டிருந்தது; அதனருகில் சிங்கம், யானை போன்ற மிருகங்களின் அழகிய பித்தளை உருவங்களும்; அதிசயிக்கத்தக்க எண்ணிறந்த சித்தரப்படங்களும்; அழகிய விமானங்களும். உயர்ந்த விலைமதிப்பில் நுண்ணிய வேலைப்பாடுகள் நிரம்

பிய சில பட்டுமெத்தைகளும் தந்தங்களில் வெகு அந்தமாகக் கொடிகள் சித்திரிக்கப்பட்ட பல்வகைப்பெட்டிகளும் வேட்டையாடும் பாவனையில் சித்திரிக்கப்பட்டிருந்த பலவித உருவங்களிலமைந்த பல பட்டுத்திறைகளும் விலைமதித்தற்கரியதும், அரசர்க்கு உரியதுமான அற்புத சாமான்களும் அக்கால நாகரீகச் சின்னங்களையும், சிற்பத்திறமைகளையும் காட்டக்கூடிய அரசரின் உடைவாள்களும் ஏராளமாக வைக்கப்பட்டிருந்தன. மற்றும் நவரத்திரத்தினகஜிதமான ரதங்கள் நான்கும், இறந்த உடலங்களை அழிவுபடாமல் காப்பாற்றக்கூடிய ரசாயனத்தால் பாதுகாக்கப்பட்ட இரண்டு அரசர்களது தேகங்களும் அங்கிருந்தன.

இரண்டாவது அறையில்:--முதலறையில்காணப்படாத அபூர்வ வஸ்துக்கள் மிகப்பல விலைமதித்தற்கரியதாய் வைக்கப்பட்டிருந்தன. அவைகள் ஒரு சிறிதும் கெடாமலும், நிறங்குன்றாமலும், ஒழுங்காக வரிசைக்கிரமத்தில் வைக்கப்பட்டிருந்தன. உலகத்திலே கிடைத்தற்கரிய பல்வேறு சாமான்களும் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன. எத்தகைய புதைப்பொருள்களிலும் இத்தகைய அபூர்வ சாமான்கள் இருந்ததேயில்லையென்று 'கார்டா' குறிப்பிட்டுள்ளார். அவற்றுடன் பித்தளையினால் செய்யப்பட்ட புராதன சிம்மாசனமொன்று தங்கமுலாமிட்டு வெகு விசித்திரமான வேலைப்பாடுகளுடன் வைக்கப்பட்டிருந்தது. அதனுடன் பலவித வாத்தியக்கருவிகளும், பழைய நாகரீகச் சின்னத்தையும், சிற்பலட்சணங்களையும் காட்டக்கூடியதும், சந்திரகாந்தக் கல்லினால் செய்யப்பட்ட பல்வகையான பாத்திரங்களும் முறையாக வைக்கப்பட்டிருந்தன. இவைகள் இதுவரையும் கண்டிராத அபூர்வ வஸ்துக்களென்று கூறப்படுகிறது.

மத்தியகாலத்தின் ஒரு சமயத்தில் ஒரு கொள்ளைக்கூட்டத்தார் இவ்வபூர்வ சாமான்களைக்கொள்ளையிட முயன்றுகொண்டிருந்தார்களென்றும், கொள்ளை நடவாமல் தடுப்பதை முன்னிட்டே இவ்வஸ்துக்கள் இங்ஙனம் மறைத்துவைக்கப்பட்டதென்றும், அவைகள்தான் இப்பொக்கிஷ அறைகளென்றும் ஆராய்ச்சியாளர் ஆராய்ந்து கூறுகின்றனர். இதுபோன்ற எத்தனையோ விஷயங்கள் ஆராய்ச்சியாளர்களும், சரித்திரக்காரர்களும் ஆராய்ந்து

கொண்டிருக்கிறார்கள். பிராசீனக்கலைகளின் ஆராய்ச்சியினால் மக்களது ஞானம் அபிவிருத்தியடையுமென்பது இஜிப்டு நாட்டாருடைய அபிப்பிராயமும், நம்பிக்கையுமாயிருக்கிறது.

42 ஆண்டுகள் நித்திரை.

ஸ்வீடன் தேசத்தில் "ஸ்டாக் ஹோம்" என்ற ஊருக்கு அருகிலுள்ள மான்ஸ்டீர்ல்ஸ் என்ற இடத்திலுள்ள பெண்ணொருத்தி 32 ஆண்டுகள் தூங்கிக்கொண்டிருந்தாளென்று கூறப்படுகிறது. இதுவன்றி 'காரோலைன்கார்லஸ்டேடர்' என்ற மற்றோர் இளஞ்சிறுமி தனது பதின்மூன்றாம் ஆண்டில் பெண்பாடசாலையொன்றில் தனது புத்தகத்தின்மீது தலையைச் சாய்த்துக்கொண்டு நித்திரை செய்ய ஆரம்பித்தாள். அதுகண்ட உபாத்தியாயர்கள் கூடி அவளை விழிக்கச்செய்வதற்கு எவ்வளவோ முயன்றும் முடியாமல் போயினர். பின்னர் அச்சிறுமியின் பந்துக்கள்வந்து அவளை தூக்கத்துடனேயே தமது வீட்டுக்கு எடுத்துச்சென்றனர். அவர்களும் எவ்வளவோ முயன்றும் விழிக்கச்செய்ய முடியவில்லை. இறுதியாக அச்சிறுமி தனது 55-ம் ஆண்டில் நித்திரையினின்றும் எழுந்து தன்னைக் கவனித்தபொழுது அவள் இளமைப் பருவமிழந்து முதுமைப்பருவம் எய்தியிருப்பதை உணர்ந்தாள். ஆனால் நித்திரையினால் அவள் எத்தகைய கஷ்டத்திற்கும் ஆளாகவில்லை. தான் 55-ம் ஆண்டில் விழித்த பின் நாடோறும் தவறாமல் உதயகாலத்தில் எழுந்திருக்கும் பழக்கத்தை மேற்கொண்டாள். அவளது தேகநிலையும் ஆரோக்கியமாயிருந்தது. தனது தொழிலையும் கவனித்து வந்தாள். அவளுக்கு நேர்ந்த தூக்கமெல்லாம், தனது ஆயுள் நீண்டகாலம் நித்திரையிலே கழிந்ததனால் படிப்பு வீணாயிற்றென்பதே. என்னே! மனிதரது அதிசய நித்திரை!

பெரிய ஸ்தூபி.

உலகத்திலுள்ள பெரிய ஸ்தூபி இங்கிலாந்திலுள்ள ஒரு தொழிற்சாலையில் கட்டப்பட்டிருக்கிறது. இதன் உயரம் 373 அடி. இதற்கு உபயோகப்பட்ட செங்கலைக்கொண்டு முப்பத்தெட்டு வீடுகள் கட்டலாம். இதைக்கட்ட இருபதினாயிரம் பொன் பிடித்ததாம்.